வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 8.2.2026 நேரம்-மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் சாகீர் உசைனின் 129-ஆவது பிறந்த நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று கோலாலம்பூரில் மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராகிமுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு வரும் மே மாதம் 3-ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

காரைக்காலில் உள்ள புகழ் பெற்ற மஸ்தான் சாஹிப் வலியுல்லா தர்கா ஷரிபின் கந்தூரி விழாவின் சந்தனம் பூசும் வைபவம் இன்று அதிகாலை நடைபெற்றது.

*சாகீர் உசைன்*

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் சாகீர் உசைனின் 129-ஆவது பிறந்த நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவருக்கு அஞ்சலி செலுத்தினார். சுதந்திர இந்தியாவின் 3-ஆவது குடியரசு தலைவராக 1967-ஆம் ஆண்டு முதல் 1969-ஆம் ஆண்டு வரை சாகீர் உசைன் பணியாற்றினார்.

*மோடி-மலேசியா*

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று கோலாலம்பூரில் மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராகிமுடன் பாதுகாப்பு, உறவுகளை வலுப்படுத்துவது, பொருளாதாரம், மற்றும் புத்தாக்க பங்களிப்பை மேம்படுத்துவது குறித்து விரிவான பேச்சு வார்த்தை நடத்தினார்.

பேச்சு வார்த்தை தொடர்பான கூடுதல் விவரங்கள்……

(வாய்ஸ்)

இந்த பேச்சு வார்த்தையின் போது பேரிடர் மேலாண்மை, ஒலி-ஒளி கூட்டுத் தயாரிப்பு, ஊழலை எதிர்த்து போராடுதல் மற்றும் தடுத்தல், பாதுகாப்பு உள்ளிட்ட துறைகளில் ஒத்துழைப்புக்கான பல புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின. பயங்கரவாத எதிர்ப்பு, உளவு தகவல் பகிர்வு, கடல் சார்

பாதுகாப்பு, ஆகிய துறைகளில் இருதரப்புக்கும் இடையிலான ஒத்துழைப்பு மேலும் விரிவடையும் என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

தீவிரவாதத்தை வேரோடு அழிப்பது எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என அவர் உறுதிப்பட தெரிவித்துள்ளார். இந்தோ-பசிபிக் பிராந்தியத்தில் ஆற்றல் மையமாக இந்தியா-மலேசியா திகழ்வதாக கூறிய பிரதமர் இப்பகுதியில் அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையின் அவசியத்தை சுட்டிக் காட்டினார். ஆசியான் இந்திய வர்த்தக சரக்கு ஒப்பந்தத்தை மிக விரைவில் இறுதி செய்ய இருநாடுகளும் ஒப்புக் கொண்டுள்ளதாக பிரதமர் கூறினார். எரிசக்தி, உள்கட்டமைப்பு, உற்பத்தி மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் பரஸ்பர ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும் என்று தெரிவித்த பிரதமர் தமிழ் மொழியை உள்ளடக்கிய வலுவான கல்வி, கலாச்சார உறவுகள் மேம்படுத்தப்படும் என்றார். இன்றைய நிகழ்ச்சிகளின் ஒரு பகுதியாக இருநாடுகளுக்கு இடையிலான வர்த்தகம், முதலீடு மற்றும் பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துவதற்காக பிரதமர், தலைமை செயல் அதிகாரிகள் மற்றும் வணிகத் தலைவர்களுடன் உரையாட உள்ளார். மேலும் இந்திய தேசிய

ராணுவ வீரர்களையும் மலேசிய பிரமுகர்களையும் இப்பயணத்தின் முடிவில் சந்திக்கிறார்.

*சிவ்ராஜ் சிங் சவ்கான்*

இந்தியா-அமெரிக்கா இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் விவசாயிகளின் நலன்கள், புறக்கணிக்கப்பட்டுள்ளதாக காங்கிரஸ் தெரிவித்துள்ளதற்கு மத்திய வேளாண் துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சவ்கான் மறுப்பு தெரிவித்துள்ளார். போபாலில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் இந்திய விவசாயிகளின் நலன்களுக்கு எதிரான எந்த ஒரு அம்சமும் இந்த ஒப்பந்தத்தில் இடம் பெறவில்லை என்று தெளிவுப்படுத்தினார். இந்திய வேளாண் விளை பொருட்களுக்கான சர்வதேச சந்தை வாய்ப்புகள் மற்றும் அவர்களின் பொருளாதார ஸ்திரத் தன்மைக்கு காங்கிரஸ் எந்த முயற்சியும் மேற்கொள்ளவில்லை என குற்றம் சாட்டிய அமைச்சர் அதேவேளையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு விவசாயிகளின் வாழ்வாதாரத்திற்கு உயர் முன்னுரிமை அளிப்பதாக கூறினார். மரபணு மாற்றம் செய்யப்பட்ட பொருட்கள் இந்தியாவில் அனுமதிக்கப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்திய அமைச்சர் பால் பொருட்கள், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பழங்கள், காய்கறிகள், பதப்படுத்தப்பட்ட உணவுப்

பொருட்கள் உள்ளிட்டவற்றின் இறக்குமதிக்கு இந்த இடைக்கால வர்த்தக ஒப்பந்தத்தில் சலுகைகள் வழங்கப்படவில்லை என்றார்.

*கஜேந்திர சிங் ஷெகாவத்*

நாட்டின் நீடித்த வளர்ச்சி, நிலைத் தன்மையை மத்திய நிதிநிலை அறிக்கை உறுதி செய்வதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கெஜேந்திர சிங் ஷெகாவத் தெரிவித்துள்ளார். ஷிம்லாவில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர் வளர்ச்சி அடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்கு திட்டங்கள் கடந்த 11 ஆண்டுகளாக முனைப்புடன் செயல்பட்டுவருவதாக தெரிவித்தார். பிரதமர் திரு நரேந்திர மோடியின் திறன் மிகு தலைமைத் துவத்தால் உலகின் 4-ஆவது பொருளாதார சக்தியாக இந்தியா திகழ்வதாகவும் கூறினார்.

*சிபி ராதாகிருஷ்ணன்*

மலேசியாவின் கோலாலம்பூரில் இந்திய வம்சாவளியினர் இடையே பிரதமர் திரு நரேந்திர மோடி ஆற்றிய உரை இருநாடுகளுக்கும் இடையிலான ஆழமான வரலாறு மற்றும் கலாச்சார பிணைப்பை அடிக்கோலிட்டு காட்டுகிறது என்று குடியரசு துணைத் தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் சமூக ஊடகப் பதிவில் கூறி உள்ளார். மலேசியாவில்

உள்ள இந்திய வம்சாவளியினர் இருநாடுகளுக்கும் இடையே வாழும் பாலமாக திகழ்கிறார்கள் என்று தமிழ் பாரம்பரியத்தைக் கொண்டாடும் பிரதமரின் கருத்துக்களை எடுத்துரைத்த அவர் திருவள்ளுவர் மையத்தை நிறுவுவதற்கான அறிவிப்பை வரவேற்பதாக தெரிவித்துள்ளார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் கலாச்சார உறவுகளை வலுப்படுத்துவதுடன் வளமான பாரம்பரியத்தை உலகம் முழுவதையும் கொண்டு செல்வதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

*நீட் தேர்வு*

MBBS, BDS உள்ளிட்ட இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு வரும் மே மாதம் 3-ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது. தேர்வு எழுத விரும்பும் மாணவர்கள் இன்று முதல் அடுத்த மாதம் 8-ஆம் தேதி வரை விண்ணப்பிக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

*அமித் ஷா*

சட்டீஸ்கர் மாநிலத்தின் பாதுகாப்பு மற்றும் வளர்ச்சி திட்டங்கள் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா ராய்ப்பூரில் ஆய்வு மேற்கொண்டார். இடதுசாரி தீவிரவாதத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில்

வளர்ச்சி திட்டங்களை மேம்படுத்துவது குறித்து மத்திய-மாநில அரசு அதிகாரிகளுடன் அவர் ஆலோசனை நடத்தினார். இன்று மாலை சட்டீஸ்கர் வளர்ச்சி தொடர்பாக நடைபெறும் மாநாட்டில் திரு அமித் ஷா உரையாற்றுகிறார். நாளை ஜக்தல்பூரில் நடைபெறும் பஸ்தார் பந்தம் திருவிழாவின் நிறைவு நிகழ்ச்சியில் அவர் கலந்து கொள்கிறார்.

***புதுச்சேரி-தேர்தல் ஆணையம்***

வரவிருக்கும் புதுச்சேரி சட்டமன்ற தேர்தலை முன்னிட்டு வாக்காளர் வருகை விகிதத்தை உயர்த்தவும் முதல் முறையாக வாக்களிக்கும், வாக்காளர்களுக்கும் பிற வாக்காளர்களுக்கும் மின்னணு வாக்குப் பதிவு இயந்திரம் செயல்முறை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த புதுச்சேரி தேர்தல் துறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த திட்டமிட்டுள்ளது.

இதுகுறித்த கூடுதல் விவரங்கள்............

(வாய்ஸ்-தேர்தல் துறை)

வரவிருக்கும் புதுச்சேரி சட்டமன்ற பொதுத் தேர்தலை முன்னிட்டு, புதுச்சேரி தேர்தல் துறை வாக்காளர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இதன் பொருட்டு, இத்துறை மின்னணு வாக்குப்பதிவு இயந்திரக் காட்சிப்படுத்தல் மையங்கள் மற்றும் நடமாடும் காட்சிப்படுத்தல் வாகனம் மூலம் விழிப்புணர்வு பிரச்சாரங்களை நடத்தவுள்ளது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டங்களின் மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் தங்களது மாவட்டங்களில் உள்ள மாவட்டத் தேர்தல் அலுவலகம் / கலெக்டர் அலுவலகத்தில் EVM காட்சிப்படுத்தல் மையங்கள் (EDCs) அமைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரி அலுவலகத்திலும் ஒரு EVM காட்சிப்படுத்தல் மையம் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையங்கள் 26.01.2026 முதல் செயல்பாட்டில் உள்ளன. இவை இந்தியத் தேர்தல் ஆணையம் தேர்தலை அறிவிக்கும் வரை செயல்படும். இதனுடன், விழிப்புணர்வு பிரச்சாரத்திற்காக ஒரு நடமாடும் காட்சிப்படுத்தல் வாகனம் இயக்கப்படுகிறது. இந்த வாகனம் தினமும் ஒரு சட்டமன்றத்

தொகுதியைச் சுற்றி பயணம் செய்து, அந்தத் தொகுதியின் அனைத்து வாக்குச்சாவடிகளைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்குகிறது. இந்நடமாடும் காட்சிப்படுத்தல் வாகனம் விழிப்புணர்வு பிரச்சாரத்தை 06.02.2026 அன்று தொடங்கியது.

இதற்கான விவரங்கள், அந்தந்த மாவட்டத் தேர்தல் அதிகாரிகளால் தேசிய / மாநில அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள், அச்சு ஊடகங்கள் மற்றும் மின்னணு ஊடகங்களுக்கு தனித்தனியாக பகிரப்படும்.

வாக்குப்பதிவு செயல்முறையை நேரடியாக உணர்ந்து அறியும் வாய்ப்பாக இதனை பயன்படுத்திக் கொள்ளுமாறு வாக்காளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

தேர்தல் தொடர்பான எந்தவொரு விளக்கத்திற்கும், பொதுமக்கள் “1950” என்ற இலவச தொலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளலாம். என்று தலைமைத் தேர்தல் அதிகாரி திரு ஜவஹர் இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

*காரைக்கால் மஸ்தான்*

காரைக்கால் மஸ்தான் சாஹிப் வலியுல்லா தர்கா ஷரிபின் 203 வது ஆண்டு கந்தூரி விழா கடந்த மாதம் 29 ந்தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது.விழாவின் முக்கிய நிகழ்வான சந்தனம் பூசும் வைபவம் இன்று அதிகாலை நடைபெற்றது.முன்னதாக நேற்று இரவு காரைக்காலின் முக்கிய வீதிகள் வழியாக வெகு சிறப்பான முறையில் மேல தாளங்கள் முழங்க சந்தனக் கூடு ஊர்வலமாக மஸ்தான் சாஹிப் வலியுல்லா தர்காவுக்கு கொண்டுவரப்பட்டு அதிகாலையில் சந்தனம் பூசப்பட்டது. இவ்விழாவில் ஜமாத்தார்கள் மற்றும் மத நல்லிணக்கத்தை போற்றும் வகையில் மும்மதத்தை சேர்ந்த ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

*விளையாட்டு*

ஆசிய துப்பாக்கிச் சுடும் போட்டியில் இந்தியாவின் இளவேனில் வாலறிவன் -அர்ஜுன் பபுதா இணை தங்கப் பதக்கம் வென்றது.

ஸ்பெயினில் நடைபெற்று வரும் சர்வதேச குத்துச் சண்டைப் போட்டியில் இந்தியா 9 தங்கம், 3 வெள்ளி, 7 வெண்கலப் பதக்கம் வென்று பதக்கப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது.

## வானிலை

தமிழகம் புதுச்சேரி மற்றும் காரைக்கால் ஆகிய பகுதிகளில் இன்று முதல் வரும் 12-ஆம் தேதி வரை அதிகபட்ச வெப்பநிலை ஓரிரு இடங்களில் 1 முதல் 2 டிகிரி செல்சியஸ் வரை படிப்படியாக உயரக் கூடும் என்றும் மேலும் வறண்ட வானிலையே நிலவக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## மீண்டும் தலைப்புச் செய்திகள்

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் சாகீர் உசைனின் 129-ஆவது பிறந்த நாளை ஒட்டி, குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு அவருக்கு அஞ்சலி செலுத்தினார்.

பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று கோலாலம்பூரில் மலேசிய பிரதமர் திரு அன்வர் இப்ராகிமுடன் இருதரப்பு பேச்சு வார்த்தை நடத்தினார்.

இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் நுழைவுத் தேர்வு வரும் மே மாதம் 3-ஆம் தேதி நடைபெறும் என்று தேசிய தேர்வு முகமை அறிவித்துள்ளது.

காரைக்காலில் உள்ள புகழ் பெற்ற மஸ்தான் சாஹிப் வலியுல்லா தர்கா ஷரிபின் கந்தூரி விழாவின் சந்தனம் பூசும் வைபவம் இன்று அதிகாலை நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது

--------------------------------